**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 19.06.2025

SC. 48/2020

அ.சா 10 – திரு. பாலகிருஷ்ணன் , காவல் துணை கண்காணிப்பாளர் ,
பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவு,
திருப்பத்தூர் மாவட்டம் .

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 19 ம் நாள் திரு. பாலகிருஷ்ணன் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. பாலகிருஷ்ணன் | தந்தை பெயர் | சுப்ரமணியன் |
| வயது | 56 | கிராமம் | மணிவிழுந்தான் |
| வட்டம் | தலைவாசல் | மாவட்டம் | சேலம் |

முதல் விசாரணை : –

நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டத்தில் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்ற தடுப்பு பிரிவில் காவல் துணை கண்காணிப்பாளராக ,பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2019 ம் வருடம் மத்திகிரி காவல் வட்டத்தில் ஆய்வாளராக பணி புரிந்த போது சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன் என்பவர் சிப்காட் காவல் நிலைய குற்ற எண் 416/2019 வழக்கில் முதற் கட்ட புலன் விசாரணையை முடித்து மேல் விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்த வழக்கு கோப்பை பார்வையிட்டு எனது புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு கடந்த 15.10.2019 ம் தேதி சாட்சிகள் மெய்யப்பன் என்கிற சந்துரு , மஹாலட்சுமி , கல்யாணகுமார் ஆகியோரரை தனித்தனியாக விசாரித்து மறு வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜலந்தர் மற்றும் வழக்கில் முதற்கட்ட புலன் விசாரணை மேற்கொண்ட காவல் உதவி ஆய்வாளர் திரு. ராஜசேகரன் ஆகியோரை விசாரித்து

தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் அனைத்து சாட்சிகளையும் விசாரித்து விசாரணை முடிவடைந்ததால் அரசு குற்றவியல் தொடர்பு துறை உதவி இயக்குநர் அவர்களை அணுகி கருத்துரை பெற்றும் , வழக்கின் ச/பி ஐ 294 (பி) , 326, 307 இதச விலிருந்து ச/பி ஐ 294 (பி) , 326, 307, 506 (II) இதச வாக பிரிவு மாற்றம் செய்து சட்டபிரிவு மாறுதல் அறிக்கையுடன் அதே சட்டப்பிரிவின் கீழ் எதிரியின் மீது கடந்த 21.07.2020 ம் தேதி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். நான் தாக்கல் செய்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ 11** ஆகும்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur

**IN THE COURT OF THE ADDITIONAL ASSISTANT SUBORDINATE COURT, HOSUR**

Date : 19.06.2025

SC. 48/2020

அ.சா 9 – திரு. ராஜசேகரன் , காவல் உதவி ஆய்வாளர் , சங்ககிரி காவல் நிலையம் சேலம் .

2025 ம் ஆண்டு ஜீன் மாதம் 19 ம் நாள் திரு. ராஜசேகரன் என்பவரின் சாட்சியாக விசாரரிக்கப்படுபவர் 1969 ம் ஆண்டு 54 வது சட்டப்பிரிவு (2) ஏற்பாட்டின் படி திரு கிருஷ்ணமூர்த்தி தலைமை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதி வழங்கப்படுகிறது .

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜசேகரன் | தந்தை பெயர் | ராமன் |
| வயது | 60 | கிராமம் | சங்ககிரி |
| வட்டம் | சங்ககிரி | மாவட்டம் | சேலம் |

முதல் விசாரணை : –

நான் தற்போது சங்ககிரி காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.10.2019 ம் தேதி சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது சிப்காட் காவல் நிலைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு. ஜலந்தர் என்பவர், சண்முகம் வயது 54 த/பெ சீனிவாசன் , 1/38 , 6 வது குறுக்கு தெரு, எழில் நகர் , பேகேபள்ளி ஒசூர் என்பவர் வாக்குமூலத்தின் பெயரில் பதிவு செய்யப்பட்ட சிப்காட் காவல் நிலைய குற்ற எண் 416/2019 ச/பி 294 (பி), 324, 506 (II) , இதச பிரிவின் முதல் தகவல் அறிக்கையை என் பார்வைக்கு வைத்ததில் நான் புலன் விசாரணைக்கு எடுத்து கொண்டு 12.30 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் முத்து குமரன் , கருணாகரன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். மாதிரி வரைபடம் **அ.சா. ஆ 9** ஆகும் . 14.00 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்த கொடுவா கத்தியை அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் 14.30 மணிக்கு ஒசூர் குணம் மருத்துவமனை சென்று அன்று சிகிச்சையில்

இருந்த வாதி சண்முகம் என்பவரை விசாரணை செய்தும் , பின்னர் சம்பவ இடம் சென்று விசாரணை செய்ததிலும் சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேடி வந்த நிலையில் எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் படி சிப்காட் பேருந்து நிறுத்தத்திற்கு அருகில் இருந்தவரை 16.00 மணிக்கு கைதுக்கான காரணம் கூறி கைது செய்து , முறைப்படி உறவினர்களுக்கு தகவல் தெரிவித்து, நிலையம் வந்து பாராகாவலர் வசம் ஒப்படைத்து பின்னர் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன், பின்னர் கடந்த 14.10.2019 ம் தேதி இவ்வழக்கின் வாதி மற்றும் 2 ம் சாட்சியான சந்துரு என்கிற மெய்யப்பன் என்பவருக்கு சிகிச்சை அளித்து காயச்சான்று வழங்கிய மருத்துவர் ஆயிஷா சுல்தானா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து , காயச்சான்றிதழ் பெற்றேன். மேற்படி சான்று ஆவணங்களில் இருந்தும் சாட்சியங்களில் இருந்தும் , எதிரி பாலன் என்பவரது வாதி மீது இருந்த முன் விரோதம் காரணமாகவே வெட்டி கொல்லவேண்டும் என்ற உள்நோக்கத்துடன் வாதியை வெட்டியுள்ளார் என்று எனது விசாரணையில் தெரிய வருவதால் , கொலை முயற்சி வழக்காக பாவித்து வழக்கின் சட்டப்பிரிவுகள் ச/பி ஐ 294 (பி) , 324, 506 (II) இதச விலிருந்து ச/பி ஐ 294 (பி) , 326, 307 இதச வாக பிரிவு மாற்றம் செய்து பிரிவு மாற்ற அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ 10** ஆகும். பின்பு வழக்கு கோப்பை மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் மத்திகிரி காவல் வட்டம் அவர்களிடம் ஒப்படைத்தேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை**

Taken down by me in Open Court and interpreted and read over to the Witness and acknowledged by him/her to be correct.

Additional Assistant Subordinate Judge,
Hosur